THE CENTRAL LAW COLLEGE, LIBRARY, SALEM-636 008.

Register No. [ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

**FSC** **4391–19**

(For the candidates admitted from 2009 – 2010 to 2016 – 2017)

B.A. B.L./B.A. LL.B DEGREE EXAMINATIONS, NOVEMBER 2019.

(Five – year Regular Course)

Fourth Year/Seventh Semester

ENVIRONMENTAL LAWS

Time : Three hours Maximum : 100 marks

PART A — (3 × 12 = 36 marks)

Answer THREE of the following not exceeding 6 pages each.

ஒவ்வொரு வினாவிற்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றினுக்கு விடையளிக்கவும்.

1. Examine the approach of the Indian Supreme Court in protecting the environment.

சுற்றுச் சூழலை பாதுகாக்க உச்ச நீதிமன்றத்தின் அணுகு முறையை ஆராய்க.

2. Explain the legal and administrative framework for the protection of Bio–Diversity.

பல்லுயிர் பாதுகாப்புக் குறித்த சட்டம் மற்றும் நிர்வாகக் கட்டமைப்பினை விளக்குக.

3. Discuss the procedure established for disposing e-waste in India.

இந்தியாவில் மின் கழிவுகளை அப்புறப்படுத்துவதற்குரிய நிர்ணயிக்கப்பட்டுள்ள நடைமுறைகளை விவாதிக்க.

4. Examine the contributions of social movements in environmental protection.

சுற்றுப்புறச் சூழல் குறித்தும் அதன் பாதுகாப்பு குறித்தும் சமுதாய இயக்கங்களின் பங்கினை ஆராய்க.

5. State whether the existing rules are sufficient to deal with solid waste management.

திட கழிவு மேலாண்மையை சமாளிக்க நடைமுறையிலுள்ள விதிகள் போதுமானதா என்பதைப் பற்றி கூறுக.

PART B — (8 × 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following not exceeding 2 pages each :

ஒவ்வொரு வினாவிற்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடைகளை எழுதுக.

(a) Precautionary Principle

முன்னெச்சரிக்கை கொள்கை



(b) Deforestation

காடுகள் அழிப்பு

(c) Rain water harvesting

மழை நீர் சேகரித்தல்

(d) Kyoto Protocol

கியோட்டோ நெறிமுறை

(e) Effect of idol immersion in river

ஆற்றில் சிலை மூழ்குதலின் விளைவு

(f) Biosphere

உயிரின கோளம்

(g) Acid Rain

அமில மழை

(h) Natural Pollution

இயற்கை மாசு

(i) Disaster Management

பேரிடர் மேலாண்மை

(j) Joint Pollution Control Boards

கூட்டு மாசு கட்டுப்பாடு வாரியம்

## PART C — (4 × 4 = 16 marks)

Answer FOUR of the following (not exceeding 2 pages each) by referring to relevant provisions of law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கினுக்கு (ஒவ்வொரு வினாவுக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. 'A' applied for consent to establish an industrial unit. The Board fixed a date of public hearing. The inmates of the area objected. Board gave permission. The board decision was not accepted by the residents. They appealed to state government. Decide.

தொழிற்சாலை துவங்குவதற்காக 'A' என்பவர் விண்ணப்பம் மேற்கொண்டார். வாரியம் பொது விசாரணைக்கு அழைத்த நாளில் அவ்விடத்தில் வசிக்கும் பொது மக்கள் ஆட்சேபம் தெரிவித்தனர். ஆனால் வாரியம் தொழிற்சாலை தொடங்குவதற்கு அனுமதி அளித்தது. இதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று குடிமக்கள் மாநில அரசிடம் மேல் முறையீடு செய்தனர். தீர்மானிக்க.



8. The Environmental tribunal banned sand mining from river beds and beaches across the country, those mining done without environmental clearance. An Appeal was filed before the Supreme Court against the decision of the Tribunal – Decide.

சுற்றுப்புறச் சூழல் தீர்ப்பாயம் நாடு முழுவதுமுள்ள ஆற்றங்கரை மற்றும் கடற்கரை பகுதிகளில் சுற்றுச் சூழல் தடையில்லா சான்று இல்லாமல் மணல் அள்ள தடை செய்தது. தீர்ப்பாயத்தின் இந்த தீர்வை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு தாக்கல் செய்யப்பட்டது.. தீர்மானிக்க.

9. The Government of India proposed to establish a Nuclear Power Plant in Trombay District of Maharashtra. Mr. Nithin, a fourth year engineering student, filed a Writ petition challenging that the establishment of Nuclear Power Plant would adversely affect the livelihood of local fishermen. Decide.

மஹாராஷ்ட்ராவின் டிராம்பே மாவட்டத்தில் அணுசக்தி மின் நிலையத்தை நிறுவிட இந்திய அரசானது முடிவு செய்தது. திரு. நிதின் என்ற நான்காம் ஆண்டு பொறியியல் மாணவன் இந்த அணுசக்தி மின் நிலையம் உள்ளுர் மீனவர்களின் வாழ்வுரிமையை பறிப்பதாக நீதிப் பேராணை மனு ஒன்றைத் தாக்கல் செய்கிறார். தீர்மானிக்க.

10. An area marked as a public park was subsequently diverted for construction of a commercial shopping unit by the Government. An activist group filed a case against the decision of the Government. Decide.

பொது பூங்காவாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடத்தில் வியாபார கடை வீதி அமைப்பதற்காக கட்டுமானம் மேற்கொள்ள அரசு அங்கீகரித்தது. இதை எதிர்த்து ஒரு தன்னார்வ தொண்டு அமைப்பு வழக்கிட்டது. தீர்மானிக்க.

11. 'A' is a heart patient. In his residential locality Glucose manufacturing boiler unit created huge noise which posed threat to his survival. So his wife filed a case against the unit to abate the nuisance – Decide.

'அ' என்பவர் ஒரு இருதய நோயாளி. அவர் வசிக்கும் இடத்தில் ஒரு குளுகோஸ் தயாரிக்கும் பாய்லர் தொழிற்கிடங்கு இருந்தது. அதிலிருந்து வரும் இறைச்சல் அவர் வாழ்வியலுக்கு அச்சுறுத்தல் அளித்தது. ஆதலால் அவர் மனைவி அந்த தொழிற்கிடங்கிலிருந்து வரும் இறைச்சல் தொல்லையை நீக்க வேண்டும் என்று வழக்கிட்டார். தீர்மானிக்க.



12. The Government of Karnataka acquired the lands in adjacent to a sanctuary to sustain white tiger habitat. The land owners objected and filed a case claiming that their right to livelihood is affected. Decide.

வெள்ளைப் புலி வகைகளை மேம்படுத்துவதற்காக சரணாலயத்தின் அருகாமையில் உள்ள நிலங்களை கர்நாடகா அரசு கைப்பற்றியது. நில உரிமையாளர்கள் இது தங்கள் வாழ்வாதாரத்தை மீறுவதாக உள்ளது என்று எதிர்ப்பு தெரிவித்து வழக்கிட்டனர் – தீர்மானிக்க.

THE CENTRAL LAW COLLEGE, SALEM-636 008. LIBRARY

Register No. | | | | | | | | |
---|---|---|---|---|---|---|---|---

**FSC** 4329–19

THE CENTRAL LAW COLLEGE
LIBRARY
SALEM-636 008

(For the candidates admitted from 2009-2010 to 2015-2016)

B.A.B.L./ B.A.LL.B. DEGREE EXAMINATIONS, MAY 2019.

(Five-year Regular Course)

Fourth Year — Seventh Semester

# ENVIRONMENTAL LAWS

Time : Three hours Maximum : 100 marks

PART A — (3 × 12 = 36 marks)

Answer THREE of the following not exceeding 6 pages each.

ஒவ்வொரு வினாவிற்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றினுக்கு விடையளிக்கவும்.

1. Explain how the affected are compensated from the effects of accident occuring while handling any hazardous substances.

அபாயம் அளிக்கும் பொருட்களை கையாளும் போது ஏற்படும் விபத்துக்களின் விளைவுகளிலிருந்து பாதிக்கப்பட்டவர்கள் எவ்வாறு இழப்பீடு பெறுகின்றனர் – விளக்குக.

2. Explain the powers of the Central government under the Environment (Protection) Act, 1986 for protection and improvement of the environment.

1986-ம் ஆண்டு சுற்றுப்புற சூழல் பாதுகாப்புச் சட்டத்தில் சுற்றுச் சூழலை பாதுகாக்கவும் மேம்படுத்தவும் மத்திய அரசிற்கு உள்ள பல்வேறு அதிகாரங்களை விளக்குக.

3. Examine the contributions of Social movements in environmental protection.

சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு குறித்து சமுதாய இயக்கங்களின் பங்கினை ஆராய்க.

4. State whether the existing rules are sufficient to deal with solid waste management.

திடக் கழிவு மேலாண்மையை சமாளிக்க நடைமுறையிலுள்ள விதிகள் போதுமானதா என்பதைப் பற்றி கூறுக.

5. What are the sources and effects of noise pollution? Explain the rules to combat noise pollution.

ஒலி மாசின் ஆதாரங்கள் மற்றும் விளைவுகள் யாவை? ஒலி மாசை நீக்குவதற்கான விதிகளை விளக்குக.

PART B — (8 × 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following not exceeding 2 pages each:

ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடைகள் எழுதுக :

(a) Carbon credit.

கார்பன் கடன்.



(b) Eco-Tourism.

சூழல் சுற்றுலா.

(c) Public Trust Doctrine.

பொது பொறுப்பாட்சி கோட்பாடு

(d) Green Tribunal.

பசுமைத் தீர்ப்பாயம்.

(e) Taj Mahal Case.

தாஜ் மஹால் வழக்கு.

(f) National Forest Policy.

தேசிய வனத்துறை கொள்கை.

(g) Bio-Diversity.

பல்லுயிர் பெருக்கம்.

(h) Ratlam Municipality case.

இரட்லம் நகராட்சி வழக்கு.

(i) Montreal Protocol.

மான்டிரியல் நெறிமுறை.

(j) Green norms.

பசுமை விதிமுறைகள்.

PART C — (4 × 4 = 16 marks)

Answer FOUR of the following (not exceeding 2 pages each) by referring provisions of Law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கினுக்கு (ஒவ்வொரு வினாவுக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. The prior government of the state built a building for official purposes. The subsequent government of the state converted the newly constructed building into a multi-speciality super hospital. The Ministry of Environment and forest granted clearance. An appeal was filed before the tribunal to set aside the clearance – Decide.

அலுவலக தேவைகளுக்காக அலுவலக கட்டிடம் ஒன்றினை முந்தைய மாநில அரசு அமைத்து கொடுத்தது. அடுத்து வந்த ஆட்சி புரியும் அரசு, அந்த அலுவலக கட்டடத்தை பலதரப்பட்ட சிறப்பு தன்மை உள்ள பெரிய பல்நோக்கு மருத்துவமனையாக மாற்றியமைத்தது. இதற்கு சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகம் அனுமதி வழங்கியது. இந்த அனுமதியை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று தீர்ப்பாயத்தின் முன்பு மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டது. தீர்மானிக்க.

8. ‘A’ applied to the State Pollution Control Board seeking permission for starting an Industry. The residents of the proposed industrial area objected in spite of which the board gave permission. The residents appealed to the State government. Can the state government hear the appeal? Decide.



ஒரு தொழிற்சாலை துவங்குவதற்கு அனுமதி கோரி மாநில மாசு கட்டுப்பாட்டு வாரியத்திடம் ‘அ’ என்பவர் விண்ணப்பம் செய்தார். அப்பகுதியின் குடியிருப்பாளர்கள் எதிர்ப்பு தெரிவித்தும் கூட வாரியம் அனுமதி அளித்தது. அங்கு குடியிருப்பவர்கள் வாரியத்தை எதிர்த்து மாநில அரசிடம் மேல்முறையீடு செய்தனர். மாநில அரசாங்கம் மேல்முறையீட்டினை கேட்குமா? – தீர்மானிக்க.

9. The Court ordered closure of a dyeing unit on the ground that it polluted the river which is a source of water supply to the residents of the locality. The State authority found some dyeing units carried out illegal operations. So Criminal proceedings were initiated – Decide.

உள்ளூர் வாசிகளுக்கு குடிக்கும் தண்ணீர் அளிக்கும் மூலமான ஆற்றை மாசுபடுத்தும் காரணத்திற்காக சாயபட்டறைகளை இழுத்து மூட நீதிமன்றம் ஆணை பிறப்பித்தது. ஆனால் சட்டத்திற்கு புறம்பாக சில சாய பட்டறையில் வேலைபாடுகள் நடைபெறுவதை மாநில அதிகாரி கண்டுபிடித்தார். இதனால் சாய பட்டறை உரிமையாளர்களின் மீது குற்றவியல் நடைமுறை சட்டப்படி வழக்கு தொடரப்பட்டது. தீர்மானிக்க.

10. Cola plant applied to Pollution Control Board for setting up of additional unit. The board gave conditional consent subjected to clearance of Ground Water Authority. But the Ground Water Authority delayed giving permission within the stipulated time. Since the condition lapsed the Pollution Control Board refused setting up of additional unit. Hence the Company files a case against the Board before the National Green Tribunal – Decide.

கோலா நிறுவனம் மாசு கட்டுப்பாட்டு வாரியத்திடம் கூடுதல் கிளை நிறுவ அனுமதி கேட்டது. வாரியமும் இதற்கு முதலில் நிலத்தடி நீர் வாரியத்திடம் அனுமதி பெற்றால் இசைவு அளிக்கப்படும் என்று நிபந்தனை அடிப்படையில் இசைவு அளித்தது. ஆனால் நிலத்தடி நீர் வாரியம் அனுமதி அளிக்க தாமதித்தது. நிபந்தனையின் காலக்கெடு முடிந்ததால் வாரியம் கூடுதல் கிளை அமைத்திட அனுமதி மறுத்தது. இதை எதிர்த்து கோலா நிறுமம் தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் முன் வழக்கிட்டது – தீர்மானிக்கவும்.

11. Mr. 'X', an advocate of Supreme Court and a Social Activist, filed a writ petition in the form of PIL under Art. 32 before the Supreme Court of India. The petitioner demanded for an issuance of a writ in the nature of Mandamus to the respondents including the State of Uttar Pradesh, Municipal Corporation and polluting industries to restrain them from letting out trade effluent into the River Ganga. Decide.

உச்சநீதிமன்ற வழக்கறிஞரான திரு.X ஒரு சமூக ஆர்வலரும் ஆவார். அவர் உறுப்பு 32ன் கீழ் உச்சநீதிமன்றத்தில் ஒரு பொதுநல வழக்கு தொடுத்தார். அதில் அவர் உத்திரபிரதேச மாநில அரசு, மாநகராட்சி மற்றும் மாசுபடுத்தும் தொழிற்சாலைகள், தங்கள் நிறுவன கழிவுகளை கங்கை நதியில் வெளியேற்றுவதை தடுக்கும் பொருட்டு நீதிப்பேராணைக்கு உத்தரவிட கோரி வழக்கிட்டார். தீர்மானிக்க.



12. 'A' went into deep forest and collected specified plants of medicinal value and sold it in open market. One day the authorities seized the plants held by him and arrested him. Decide.

'அ' என்பவர் அடர்ந்த காட்டிற்குள் சென்று மருத்துவ தன்மையுள்ள அரிய வகை சிறப்பு தாவரங்களை சேகரித்து வந்து வெளிசந்தையில் விற்றுக் கொண்டிருந்தார். ஒரு நாள் அதிகாரிகள் 'அ' வைத்திருந்த தாவரங்களை அபகரித்து அவரை சிறைக் காவலில் வைத்தனர். தீர்மானிக்க.

Register No. [ ] [ ] [ ] [ ] [ ] [ ] [ ] [ ]

THE CENTRAL LAW COLLEGE LIBRARY SALEM-636 008.

# FSC

4101–18

(For the candidates admitted from 2009–2010 to 2015–2016)

B.A., B.L./B.A. LL.B. DEGREE EXAMINATIONS, NOVEMBER 2018.

(Five Years Regular Course)

Fourth Year — Seventh Semester

## ENVIRONMENTAL LAWS

Time : Three hours　　　　Maximum : 100 marks

PART A — (3 × 12 = 36 marks)

Answer THREE of the following not exceeding 6 pages each.

ஒவ்வொரு வினாவிற்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றினுக்கு விடையளிக்கவும்.

1. Discuss the steps taken by Indian government in Paris agreement on climatic change.

   தட்பவெப்ப நிலை மாறுதல் பாரிஸ் உடன்படிக்கை குறித்து இந்திய அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகளை விவாதிக்க.

2. Explain the reasons for depletion of ground water resources.

நிலத்தடி நீர் வளங்கள் குறைவதற்குரிய காரணங்களை விவரிக்க.

3. State the changes made in Environmental impact assessment.

சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீடு மாற்றங்களை கூறுக.

4. Discuss the powers and functions of the Pollution Control Board under the Environmental Protection Act.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டத்தில் மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் அதிகாரங்கள் மற்றும் செயலாக்கம் குறித்து விவாதிக்க.

5. "Every generation should leave water, air and soil resources as pure and unpolluted as inherited" – Comment.

ஒவ்வொரு தலைமுறையினரும் நீர் காற்று மற்றும் மண்வளம் ஆகியவற்றை பூமியில் எவ்வாறு சுத்தமாகவும் மாசுபடாமலும் கிடைக்கப்பெற்றோமோ அதே நிலையில் அவற்றை விட்டுச் செல்ல வேண்டும் – விளக்கம் செய்க.



PART B — (8 × 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following not exceeding 2 pages each :

ஒவ்வொரு வினாவிற்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடைகள் எழுதுக :

(a) Carbon Trade.

கார்பன் வர்த்தகம்.

(b) Solid-waste Management.

திடக்கழிவு மேலாண்மை.

(c) Natural Disaster.

இயற்கை சீற்றம்.

(d) Mehta and Environment.

மேத்தா மற்றும் சுற்றுச்சூழல்.

(e) Environmental fundamental duty.

சுற்றுச்சூழல் அடிப்படை கடமை.

(f) Ganges River Restoration.

கங்கை நதி மீட்பு.

(g) Green Tribunal.

பசுமைத் தீர்ப்பாயம்.

THE CENTRAL LAW COLLEGE LIBRARY SALEM-636 003.

(h) Specified plants.

சிறப்பு தாவரங்கள்.

(i) Central Zoo Authority.

மத்திய விலங்கியல் வாரியம்.

(j) Wild life.

வனவியல்.

## PART C — (4 × 4 = 16 marks)

Answer FOUR of the following (not exceeding 2 pages each) by referring to relevant provisions of law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கினுக்கு (ஒவ்வொரு வினாவிற்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. The port trust of "Mechi" dredged sedimental rocks for making way for shipping without obtaining approval from Coastal Regulation Zone Management Authority in the backwaters of "Mambanad". 'Nature Watchers' an voluntary organization sought restraint of the project before the court on the ground that it affects the ecological sensitive area – Decide.



மாம்பாநாடு உப்பங்கழி பகுதியில் கடலோர ஒழுங்கு மண்டலம் மேலாண்மை வாரியத்தின் அனுமதி இன்றி கடற் போக்குவரத்திற்காக கடல் அடித்தளத்தில் உள்ள பாறைப்படிவுகளை "மெச்சி" துறைமுகம் அகற்றியது. "இயற்கை பார்வையாளர்கள்" என்ற தன்னார்வு தொண்டு நிறுவனம் இச்செயல் சுற்றுச்சூழல் உணர்திறன் பகுதியினை பாதிக்கும் என்ற காரணத்திற்காக இத்திட்டத்திற்கு தடை விதிக்க வேண்டும் என்று நீதிமன்றத்தில் கோரியது – தீர்மானிக்க.

8. The invasive species of Seemai Karuvelai plants of Indian Institute of Technology premises were ordered to be removed by the government as per the courts order. "Animal Trust" an Non-Governmental Organisation filed a restraint application before the court on the ground that removing Karuvelai Seemai would affect the black buck that benefit from the shade, as many trees were lost during cyclone in the campus – Decide.

இந்திய தொழில்நுட்ப பயிற்சியகத்தில் சீமை கருவேல தாவரம் ஆக்கிரமிப்பு செய்வதால் அவற்றை நீதிமன்ற ஆணையின் படி அப்புறப்படுத்த வேண்டும் என்று அரசு ஆணையிட்டது. இது அந்த தாவரங்களின் நிழலில் இருக்கும் கறுப்பு வகை இன மானை பாதிக்கும் ஏன் என்றால் சூறாவளிக்குப் பிறகு பல மரங்கள் சாய்ந்து விட்டன என்ற காரணத்தின் அடிப்படையில் விலங்குகள் அறங்காவல் தன்னார்வு தொண்டு நிறுவனம் இத்திட்டத்தினை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று நீதிமன்றத்தில் மேல்மனு தாக்கல் செய்தது – தீர்மானிக்க.

9 The Government of India commenced a hydrocarbon project at 'Madivasal'. The people of the area objected to the project on the grounds that drinking water is contaminated and it deprived the right to drink and filed a case – Decide.

மாடிவாசல் பகுதியில் ஹைடிரோ கார்பன் திட்டம் ஒன்றினை இந்திய அரசு துவக்கியது. இதனால் அவ்வூர் மக்கள் தங்கள் குடிநீர் அசுத்தமாக இருக்கின்றது மற்றும் இது தங்கள் குடிநீர் பருகும் உரிமையை பாதிக்கின்றது என்ற காரணங்களின் அடிப்படையில் வழக்கிட்டனர் – தீர்மானிக்க.

10. The Government of India brought BS-IV emission standards to vehicles, thereby banned BS-III vehicles. The Automobile manufacturing association filed a case before the Supreme Court on the grounds of BS-III already manufactured vehicles should be permitted to be sold in the market – Decide.

இந்திய அரசாங்கம் பீ.எஸ்-மூன்று வகை ஊர்திகளுக்கு தடை விதித்து பீ.எஸ்-நான்கு வகை உமிழ்வு தர நிலைகளை கொண்டு வந்தது. ஆட்டோமொபைல் தயாரிப்பு சங்கம் உச்ச நீதிமன்றத்தில் தயாரிக்கப்பட்ட பீ.எஸ்-மூன்று வகை உமிழ்வு தர நிலை ஊர்திகளை விற்க அனுமதிக்க வேண்டும் என்று வழக்கிட்டனர் – தீர்மானிக்க.



11. Ammonia gas leaked from a ice-factory. People of the locality complained uneasiness by inhaling it. A person died and twenty others were injured. A resident of the locality filed a case seeking compensation – Decide.

ஐஸ்க்கட்டி தொழிற்சாலையிலிருந்து அமோனியா வாயு கசிவு ஏற்பட்டதால் அப்பகுதியில் வாழும் மக்களுக்கு சுவாசக் கோளாறு ஏற்பட்டது. ஒரு நபர் இறந்தார் மற்றும் இருபது நபர்கள் பாதிக்கப்பட்டனர். உள்ளூர் வாசி ஒருவர் இழப்பீடு கேட்டு வழக்கிட்டார் – தீர்மானிக்க.

12. At the capital city of Delhi, air pollution attained its peak. When authorities traced the reason for the pollution, found out that since residues of the crops are being burnt for cultivation purposes. The Environmental Pollution Control Authority filed a case against farmers before the National Green Tribunal and sought order of restraint – Decide.

தில்லி தலைநகரத்தில் இதுவரையில் காணப்பெறாத அளவு காற்று மாசு ஏற்பட்டது. அதிகாரிகள் காரணத்தை தேடும் பொழுது இது விவசாயிகள் பயிர்களின் எஞ்சிய கழிவுகளை பெரிய அளவில் எரிப்பதால்தான் ஏற்படுகின்றது என்று கண்டு அறிந்தனர். சுற்றுச்சூழல் மாசு கட்டுப்பாடு வாரியம் விவசாயிகள் பயிர்களின் எஞ்சிய கழிவுகள் எரிப்பதற்கு தடை விதிக்குமாறு தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் வழக்கிட்டனர் – தீர்மானிக்க.